C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

# மன்னா..

பொழிவு : 17 JUNE 2025 ஆகாரம் : 06

## நடுகிறவனாலும் ஒன்றுமில்லை

நீர்ப் பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை,

விளையச் செய்கிற

தேவனாலே

எல்லாமாகும்.

1கொரிந்தியர் 3:7



# UPCOMING EVENTS

All Sun June '25 — Sunday

5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

All Sun June '25 — Sunday

7:30 pm
**COTTAGE PRAYER**
Church Members House

All Tue & Fri June '25 — Tue & Friday

5:00 pm & 6.30 pm
**TAMIL CLASS**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

All Wed June '25 — Wednesday

7:30 pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

All Sat June '25 — Saturday

6:30 pm
**CHILDREN BIBLE SCHOOL**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

07 21 June '25 — Saturday

7:30pm - 09:30pm
**HOLY COMMUNION SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

14 28 June '25 — Saturday

7:30pm - 09:30pm
**EVENING SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

28 June '25 — Saturday

9:30 pm
**BIBLE QUIZ 2CHRONICLES**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

29 June '25 — Sunday

10:00 am
**MINISTRY LEADERS RETREAT**
Majlis hall-Kanad Hospital

30 June '25 — Sunday

5:00 pm
**MONTH END SERVICE**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

## From the Pastor's
# Desk



**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள்.**

ஜூன் மாதத்தில் உலகம் முழுமையிலும் பல சிறப்பு தினங்களை கடைபிடிக்கின்ற நிலை உண்டு. அதில் குறிப்பாக ஜூன் 5—ம் தேதியை உலகு சுற்றுச்சூழல் தினமாக கடைபிடிக்கின்றது (WORLD ENVIRONMENT DAY) ரெய்மண்ட் பணிக்கர் என்கிற இறையலாளர், "ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இறைத்தன்மையும், இயற்கையின் தன்மையும் உள்ளது.மனிதன் இவை இரண்டும் இணைந்தப் பூரண மனிதனாக உருவாக்கப்பட்டான்" என்று குறிப்பிடுகிறார். கடவுள் உலகனைத்தையும் ஆறு நாட்களில் படைத்த நிகழ்வை ஆதியாகமம் முதல் இரண்டு அதிகாரங்களில் படிக்கின்றோம். கடவுள் படைப்பிலே பகல், இரவு, வானம், பூமி, கடல், மரங்கள், செடிகள், புற்பூண்டுகள், சூரியன்,சந்திரன், நட்சத்திரங்கள், நீர் வாழ்வன, பறப்பன, ஊர்வன, நாட்டு விலங்குகள், காட்டு விலங்குகள் என்று படைப்பை முடித்து, அதன் மகுடமாக கடவுள் தம் சாயலில் ஆறாம் நாளில் மனிதரையும் படைத்தார்.

இவ்வாறு நேர்த்தியாக படைப்பை முடித்தக் கடவுள் அவை நல்லது என்று கண்டார்.இந்த இயற்கைச் சூழல் இன்று சரியாக உள்ளதா என்பதை சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

**தமது சாயல்:**

கடவுள் தம்முடைய சாயலாக மனிதரைப் படைத்தார், அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார் (ஆதி1:27). மனிதரின் படைப்பிலே பூமியில் இருந்து மண்ணை எடுத்து, கடவுள் தம் சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார் மனிதன் வாழ்வு பெற்றான் (ஆதி 2:7). எனவே, மனிதரை இயற்கையோடு இணைந்த படைப்பாக கடவுள் படைத்தார். இந்த படைப்பனைத்தும் மனிதருடைய கண்ணிற்கு வெகு ஆச்சரியமானவைகள். மனிதரின் கீழ்படியாமையினால் இறைச்சாயலை இழந்து (IMAGE OF GOD) நிற்கிறோம், சிந்திப்போம்.

**கடவுளின் படைப்பு:**

அகிலம் அனைத்தையும் கடவுள் நேர்த்தியாக, பூர்த்தியாக படைத்தார் (ஆதி1: 28—30). இவ்வளவு மகத்தான படைப்பைக் கடவுள் படைத்து, அதிலே சிறப்பாக மனிதரை தம் சாயலிலே படைத்து அனைத்தும் நன்றாக இருப்பதைக் கண்டார். மனிதரிடத்தில் படைப்பைக் கொடுத்தார், இதனைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் ஏதேன் தோட்டத்திலே மனிதரை வைத்தார் (ஆதி2:15). இன்றையக் காலச்சூழலில் இயற்கை தனது சமநிலைத் தன்மையை இழந்து விட்டது. இதற்குக் காரணம் மனிதரே,அதில் நாமும் உள்ளடக்கமே சிந்திப்போம்.

## அறைகூவல்:

படைப்பனைத்தும் நன்றாயிருந்தது என்று கர்த்தர் கண்டு, நிறைவடைந்தார் (ஆதி 1:31). மனக்குலத்தின் சுயநலத்தால் அன்று தொடங்கி, இன்று வரை இயற்கையின் சமநிலைத் தன்மை சீரழிந்து கொண்டே வருகிறது, இயற்கை வளங்கள் மிகவும் பாதிக்கப்படுகிறது. இறைச்சாயலில் படைக்கப்பட்ட மனிதர் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளே. பவுல் குறிப்பிடுவது, "நடுகிறவனாலும் அல்ல, நீர் பாய்ச்சுகிறவனாலும் அல்ல விளையைச் செய்கிற கர்த்தராலே ஆகும்" (1கொரி3:7). எனவே கடவுளின் அழைப்பை ஏற்போம்,அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடப்போம். நெகிழிகளை (PLASTIC) தவிர்ப்போம், மரம் வளர்ப்போம், சுற்றுச்சூழலைக் காப்போம். உடன் வாழும் சகோதர சகோதரிகளை நேசிப்போம். "படைத்தார் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தார் தன்னை வணங்க" என்கிறது தமிழ் இலக்கியம்.

**"உன் கடவுளிடம் முழு இருதயத்தோடும், அன்புகூருவாயாக" (மாற் 12:30).**

கடவுளிடம் அன்பு கூர்தல் வேண்டும், அவர் படைத்த படைப்பையும் அவர் சாயலில் படைக்கப்பட்ட மனிதரிடத்திலும் அன்பு கூர்ந்து வாழ வேண்டும் என்பதே. அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிவோம், சுற்றுச்சூழலைப் பாதுகாத்து வாழ்வோம், ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan

## மன்னா மே-25 மீள் பார்வை...




ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை.கடந்த மே மாத மன்னாவைக் குறித்து ஒரு பார்வை. பக்கம்-3ல், விடாமுயற்சியுடன் நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசுவிடம் நாம் வேண்டும்போது அவர் பதில் தருவார் என்றும், பக்கம் 4ல்,செயலர் மடலில் திருச்சபையின் நிகழ்வு மற்றும் அவுட்ரீச் மினிஸ்ட்ரியின் தெளிவும், ஆண்டவர் இயேசுவிடம் காத்திருந்து வேண்டி, நெடுங்காலம் காத்திருக்கும் போது நிறைவும் உயர்வும் உண்டாகும் என்றும்,பக்கம்- 7ல், கிறிஸ்தவரின் வாழ்வில் தூய்மையே மிகத் தேவையானது என்றும்,பக்கம்-9ல், கிறிஸ்தவராகிய ஒவ்வொருவருக்கும் எதிராளியான சாத்தானை அறிந்து கொண்டு, இயேசு கிறிஸ்துவைப் பற்றி கொண்டு வாழ வேண்டும் என்றும்,பக்கம்-11ல், நீடிய பொறுமையுடன் ஆண்டவர் இயேசுவின் பாதத்தில் காத்திருந்து ஜெபிக்கும் போது, வெற்றி நிச்சயம் என்றும்,பக்கம்-12 ல் நீண்ட காலமாக எதிர்பார்த்துக் காத்திருந்த ஆசீர்வாதம் கர்த்தரால் வரும் அதனால் ஆண்டவர் இயேசுவில் பெலன் கொள்ளுங்கள் என்றும், சிறுபிள்ளைகளின் புதிர்களுக்கான விடைகள் எழுதியிருப்போர், சிறு பிள்ளைகளின் கைவண்ணங்கள், திருமறை விழாவிற்கான விடைகள் எழுதி இருப்போர், இம்மாத புதிர்கள் மற்றும் அனைத்து ARTICLE எழுதியுள்ளோர் என அனைவருக்கும் அனைத்திற்கும் வாழ்த்துக்கள், கடவுள் ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

**இறைப்பணியில்,**
**ஆயர்.**

# சிறப்பானவர்கள்



ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

அன்பிற்கினியவர்களே, திருமறையில் வருகின்ற முதல் பறவை காகம் (ஆதி 8:7). நோவா பேழைக்குள்ளாக இருந்து காகத்தை வெளியே விட்டபோது அது போகிறதும் வருகிறதுமாக இருந்தது. காகத்தின் வழியே சிலவற்றை நாம் கற்போம்.

### கீழ்ப்படிதல்:

இஸ்ரேல் நாட்டில் கடுமையான பஞ்சம் உண்டான போது ஆண்டவரின் தீர்க்கரான எலியாவுக்கு உணவு தந்து காக்கும் படியாக காகத்திற்கு கர்த்தர் கட்டளையிட்டார் (2இராஜா—17:4). கர்த்தரின் கட்டளைப்படி, காகங்கள் கீழ்ப்படிந்து விடியற்காலத்திலும், சாயங்காலத்திலும் எலியாவிற்கு காகங்கள் அப்பத்தையும் இறைச்சியையும் கொண்டு வந்து கொடுத்தன (2இராஜா—17:6), அவை கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தன.

### கூப்பிடுங்கள்:

யோபு குறிப்பிட்டுச் சொல்லுவது, ஆகாரம் இல்லாமல் அலைந்து திரிகிற காக்கைக் குஞ்சுகளுக்கு உணவு கொடுக்கிறவர் யார்? (யோபு38:41), கர்த்தர் அல்லவா என்று கூறுகிறார். சங்கீதக்காரர் குறிப்பிடுவது, ஆண்டவரை நோக்கிக் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரம் கொடுக்கிறவர் கர்த்தரே ஆவார். எனவே, ஆண்டவரையே நோக்கிக் கூப்பிடுங்கள் என்று கூறுகிறார்.

### ஒற்றுமை:

ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறுவது, காகங்களை கவனித்து பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை, களஞ்சியமுமில்லை, அவைகளையும் கர்த்தர் பிழைப்பூட்டுகிறார் (லூக்12:24) என்றார்.

நீங்கள் எதைக் குறித்தும் கவலைப்படா—திருங்கள், காகங்களிடமிருந்து ஒற்றுமையைக் கற்றுக் கொள்ளுங்கள் அவைகள் அனைத்தையும் ஆண்டவரே பிழைப்பூட்டுகிறார்.

நிறைவாக, காகங்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது, ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படிவது, கர்த்தரையே நோக்கி விசுவாசத்துடன் கூப்பிடுவது, அனைவரும் ஒற்றுமையாக வாழ்வது என்பதே.

ஏனெனில் பறவைகளைப் பார்க்கிலும் நீங்கள் சிறப்பானவர்கள் அல்லவா என்று நம்மை குறிப்பிட்டு கூறுகிற கர்த்தர், அவரின் சாயலிலே நம்மைப் படைத்திருக்கின்றார், அதனால் கவலைப்படாமல் ஆண்டவர் இயேசுவின் பாதங்களைப் பற்றிப் பிடித்து வாழ்வோம், கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,
ஆயரம்மா

*Mrs . P . Velanganni*

# செயலர் மடல்



கிறிஸ்துவுக்குள் பிரியமான திருச்சபை மக்கள் அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள். கடந்த ஐந்து மாதங்கள் காத்து வழி நடத்திய நம் கர்த்தாதிகர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். கிருபையும் இரக்கமும் நிறைந்த ஆண்டவர் எப்பொழுதும் நம்மை வழி நடத்துவராக. கடந்த மாதம் கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நம் திருச்சபையின் ஆயரின் பெரிதான உதவியினால், திடப்படுத்தல் ஆராதனை சிறப்பாக நடந்து முடிந்தது, வேலூர் மண்டல பேராயர் வந்து இந்த சிறப்பு ஆராதனையில் பங்கு பெற்று நம் திருச்சபையின், பிள்ளைகளுக்கும் அங்கத்தினர்களுக்கும் திடப்படுத்துதல் வழங்கினார். எல்லா புகழும் மாட்சிமையும் கர்த்தாதி கர்த்தருக்கு உண்டாவதாக. அதே போல் நம் திருச்சபையின் சபைநாள் வெகு விமரிசையாக கொண்டாடப் பெற்றது, அதில் ஆயர்மார்கள் திரு. ஜான் ஜெபிலின் ஜோஸ் மற்றும் திரு. சார்லஸ், திரு. ஜம்சன் ஜெபசிங் பங்கு பெற்று ஆராதனையை சிறப்பித்தார்கள். கிறிஸ்துவ வழி நடத்துதலில் திருச்சபை எப்படி விளங்க வேண்டும் என்று எடுத்துரைத்தார். கிறிஸ்துவை மையமாக கொண்டு திருச்சபை, அர்ப்பணிப்புள்ள திருச்சபை, மாற்றும் பெறுகிற திருச்சபை, என்பதை அருள் திரு. ஜான் ஜபலின் ஜோஸ் ஆயர் ஐயா அவர்கள் எடுத்துரைத்தார். திருச்சபையின் வரலாற்றை, திருச்சபையின் மூத்த உறுப்பினர், திரு. நேசமணி அவர்கள் திருச்சபைக்கு விவரித்து கூறினார். நமக்குத் தந்த திருச்சபைக்காக எப்பொழுதும் நன்றியுள்ளவர்களாய் இருப்போம்.

## 2. உங்கள் சிந்தனைக்கு:

சங் 103—11 பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. தேவனுக்கு பயப்படுகிற—வர்களாகிய நாம் தேவனை நோக்கி வேதனை உண்டாக்கும் வழிகள் எங்களிடம் உண்டோ மேலும் எங்களிடம் இருக்கும் உமக்கு பிரியமில்லாத வழிகளை விட்டு விட எங்களுக்கு பெலன் தாரும், என்று மன்றாடுவோம். தேவ சமூகத்தில் தன்னை தாழ்த்திய ஆயக்காரன் தேவ கிருபையினால் நீதிமானாய் திரும்பி சென்றதை போல தேவனுக்குபயப்படுகிற, நாம் நம்மை தாழ்த்தி கிருபையை அனுதினமும் பெற்று கொள்கிறவர்களாய் வாழ்வோம் தேவன்தாமே இந்த புதியமாதத்திலும் வல்லமையாய், அவர்பணிகாய், பயன்படுத்துவாராக. ஜெபத்திலே தரிக்கவும், அன்பிலே ஊன்றகட்டப்படவும், திருவசனமாகிய ஞானப்பாலை அனுதினமும் அருந்தி, அவர் வல்லமை பெற்றுக்கொள்ள எல்லாம் வல்ல இறைவன் நமக்கு அருள் புரிவானாக ஆமென்.

**இறைப் பணியில்**

Mr. Santhosh Kumar

திருச்சபைச் செயலர்

# விசுவாசமே வெல்லும்



"நமது விசுவாசமே உலகை வெல்லும் " (1 யோ 5:4)

பாவம் நிறைந்த உலகில் பாவத்தின்மேல் வெற்றி காண்பது சாத்தியமா? இன்றைக்குப் பிரச்சினைகளிலெல்லாம் பெரிய பிரச்சினை பாவ பிரச்சினைதான். பாவத்தின் சுருக்கமான ஆனால் நிறைவான வரையறை 1யோவான் 2:16 இல் காண்கிறோம் "உடல் ஆசையும், இச்சை நிறைந்த பார்வையும், செல்வச் செருக்குமாகிய உலகிலுள்ளவை நமது ஆண்டவரிடத்தில் இருந்து வருபவையல்ல அவை உலகிலிருலிந்தே வருபவை" எல்லா பாவங்களும் இம்மூன்றுக்குள் அடங்கும் எடுத்துக்காட்டாக, ஆதமுக்கும் ஏவாளுக்கும் வந்த சோதனை இதுதான். பழமானது உண்பதற்கு நல்லதாய் இருந்தது – உடல் ஆசை; பழமானது கண்களுக்குக் களிப்பூட்டுவதாயிருந்தது கண்களின் இச்சை; அதை சாப்பிடும் நாளில் கடவுளைப்போல ஆவீர்கள் – செருக்கனா வாழ்வு. இந்த சோதனையில் அவர்கள் இருவரும் படுதோல்வியடைந்தனர். இரண்டாம் ஆதமாகிய இயேசுவுக்கும் இதேவித சோதனைகள் வந்தன; "இந்த கல்லுகள் அப்பங்களாகும்படிச் செய்யும்" – உடல் ஆசை; மலையின்மேல் கொண்டுபோய் உலகத்தின் அனைத்து நாடுகளையம் அவைகளின் மாட்ச்சிமையையும் அவருக்குக் காண்பித்து, இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்" என்றது கண்களின் இச்சை; தேவாலயத்துக் கோபுரத்தின்மேல் அவரை நிறுத்தி, "கீழே குதியும் தூதர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்" என்றது வாழ்வின் பெருமை இந்த மூன்று பொல்லாத சோதனைகளையும் உலகம் என்ற ஒரே வார்த்தையில் அடக்கலாம் .இயேசு இவைகளின்மேல் வெற்றி சிறந்தார்.

கிறிஸ்த்துவைப்போல வென்றிட நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை 1 யோவான் 5:4 மிக அழகாக கூறுகிறது ;"தேவனால் பிறப்பதெல்லாம் உலகை வெல்லும் நமது விசுவாசமே உலகை வெல்லும். :ஜெயிக்கும் இவ்விசுவாசம் என்ன என்பதை அடுத்த வசனம் தெளிவாக்குகிறது ; "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனைத்தவிர உலகை வெல்லுகிறவன் யார்? இவ்உலகின் சோதனைகளை வென்றிட இயேசுவே இறைமகன் என விசுவாசித்தல் போதுமாம்! என்னே எளிமை, என்னை வல்லமை

இந்த விசுவாசம்தான் நமது கேடகம் ஆகும் எபேசியர் 6:13–17 இல் நமக்குத் தேவையான ஆறு போர்காலன்களை பார்க்கிறோம் "எல்லாவற்றிக்கும் மேலாக" விசுவாசம் என்னும் கேடகத்தை பிடித்துக்கொள்ள வேண்டுமாம்! இடைக்கச்சை, மிதியடி, தலைசீரா, பட்டயம், அனைத்துமே முக்கியமானதாயிருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலாக பிடிக்கவேண்டியது விசுவாசமென்னும் கேடகத்தையே, உடலின் எப்பகுதியையும் கேடகம் பாதுகாக்கும்.

விசுவாசமானது கேடகம் மட்டுமல்ல, மார்புக் கவசமும்கூட. "விசுவாசம், அன்பு என்னும் மார்புக் கவசத்தையும் அணிந்துகொண்டிருக்கவேண்டும்" (1தெச.5:8). இதுதான் வெற்றி வாழ்க்கையின் இரகசியம். இயேசு உலகின் சோதனைகளை வென்றது போல அவரை விசுவாசித்தால் நாமும் வெல்ல முடியும்.


Article by

**MR. RAJESH ANBU**

Men's Fellowship



# விசுவாசம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, அனைவருக்கும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

விசுவாசமானது, நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. எபிரெயர் 11:1 ஒருவருடைய எதிர்பார்ப்புகள் நிச்சயம் நடக்குமென்ற உறுதி கிடைக்க. வேண்டுமென்றால், அதை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் வேண்டும். விசுவாசம் எப்போதும் அன்பை பிறப்பிக்கும். அன்பு விசுவாசத்தை உறுதிப்படுத்தும். இவ்விரண்டும் இருந்தால் ஒரு கிறிஸ்தவன் எந்த சத்துருவையும் எதிர் கொள்ளலாம்.

எது இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஆண்டவர் நம்முடைய வாழ்க்கையில், நம்மோடு இருக்கிறார் என்பதை உணர்ந்து களிகூர வேண்டும். எல்லாவற்றையும் இழந்த நிலையில் கூட யோபு குறை கூறவே இல்லை. நாம் எந்த நிலைமையில் இருந்தாலும் விசுவாசத்தின் வாழ்க்கையை முழுமையாய் வெளிப்படுத்த வேண்டும். நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன். என் தேவனுக்குள் களிகூருவேன். ஆபகூக் 3:18

எல்லாவற்றிற்கும் புலம்புகிறதை நிறுத்தி விட்டு, நன்றி செலுத்தி, துதிக்கின்ற வாழ்க்கை வாழும் படி அர்ப்பணித்து விட்டு, கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே நம்முடைய பெலன். கடவுளுக்கும் நமக்கும் இடையேயான ஒரு தனிப்பட்ட உறவு உண்டாக இந்த விசுவாசமே அடிப்படை. விசுவாசமே நம்மை ஜெபிக்க வைக்கிறது. விசுவாசமே இறைவனின் திட்டத்தை ஏற்க வைக்கிறது. விசுவாசமே அவருக்காக காத்திருக்க வைக்கிறது. அவருடைய அருகாமையையும், வழிகாட்டுதலையும் உணர வைக்கிறது.

துயரமான வேளைகளில் ஆறுதலையும், தடுமாறும் வேளைகளில் நம்பிக்கையும் தருவது விசுவாசமே. சோதனைகளை கடக்கின்ற வலிமையைத் தருவதும் நாம இறைவன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையே.

விவிலியத்தில், எலியாவை போஷித்த காகம், பிலேயாமை எச்சரித்த கழுதை, யோனாவை விழுங்கி பாதுகாத்த மீன், இவையனைத்தும் (விலங்குகள்) இறைவனின் கட்டளைப்படி செய்தது. ஆனால் அவைகளுக்கு விசுவாசம் இல்லை. நாமும் விசுவாசமில்லாமல் செயல்களை செய்யும் போது இந்த விலங்குகள் போலாகிறோம். ஒரு பறவையின் இரு சிறகுகள் போல நம் விசுவாசமும், செயல்பாடுகளும் இருக்க வேண்டும்.

இயேசுவின் மீதான நம் விசுவாசத்தை எப்படி வெளிப்படுத்துவது? அவரது கட்டளைகளை கடைபிடிப்பதால் மட்டுமே.

உன் சுய புத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும், கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார். நீதிமொழிகள் 3:56

## விசுவாசம் ஏன் இருக்க வேண்டும் ?

தேவன் தனக்கு சொந்தமானவர்களையும், சொந்தமில்லாதவர்களையும் வேறுபடுத்த வடிவமைத்த வழி தான் விசுவாசம். நம் தேவனைப் பிரியப்படுத்த நமக்கு விசுவாசம் தேவைப்படுகிறது. நாம் அவரை பார்க்க முடியா விட்டாலும் , நாம் அவரை நம்புவது அவருக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

- விசுவாசத்தினால் ஆபேல், கர்த்தருக்கு பிரியமான பலியை செலுத்தினான்.
- விசுவாசத்தினால் நோவா, மழையை எதிர்பாராத காலத்தில் பேழையை தயார் செய்தார்.
- விசுவாசத்தினால் ஆபிரகாம், கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து, எங்கு செல்வது என அறியாமலே வீட்டை விட்டு , கர்த்தர் காட்டிய இடத்திற்கு சென்றார். அது மட்டுமல்ல, தன் ஒரே மகனை மனவிருப்பத்துடன் ஒப்புக்கொடுத்தார்.

இது போன்று அநேகர், விசுவாசத்தினாலே ராஜ்யங்களை ஜெயித்தார்கள். நீதியை நடப்பித்தார்கள். வாக்குத்தத்தங்களை பெற்றார்கள். சிங்கக்கெபியில் காப்பாற்றப் பட்டார்கள். அக்கினியின் நடுவே நடந்தார்கள். பட்டயக்கருக்குக்கு தப்பினார்கள். பலவீனத்தில் பலங்கொண்டார்கள். யுத்தத்தில் வல்லவர்களானார்கள். அந்நியருடைய சேனையை முறியடித்தார்கள். இவர்களின் செயலால், விசுவாசத்தின் செயல்யாடுகள் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. விசுவாசம் என்பது வெறும் அன்பு மட்டுமல்ல, நம்பிக்கை மட்டுமல்ல. அன்புடன் கூடிய நம்பிக்கை தான் விசுவாசம். அது மலைகளையே நகர்த்தும் வலிமை வாய்ந்தது.

## தேவனுடைய அன்பு எது?

விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு இவை அழகாக போற்றப்படும் தெய்வீக குனங்கள். இந்த குணங்களின் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். இவை கர்த்தரின் ரூபத்தை பிரதிபலிக்கிறது. ஆனால், சாத்தானுக்கு இந்த குணங்கள் கிடையாது. மட்டுமல்ல, இந்த குணங்களுடையவர்களை வெறுக்கிறான். ஆனாலும் நாம் விசுவாசத்தினால் சாத்தானை மட்டுமல்ல உலகையே வெல்ல முடியும்.

## தேவனிடத்தில் நம் மெய்யான விசுவாசத்தை கட்டி எழுப்புவது எப்படி?

நாம் மெய்யான விசுவாசத்தை கொண்டிருக்க வேண்டுமென்றால் நாம் அனுதினமும், வேத வசனங்களை வாசித்து, அடிக்கடி அவைகளை தியானித்து, ஜெபித்து செயல்பட வேண்டும். நாம் தேவனிடத்தில் ஜெபிக்கும் போது, கடவுளின் சித்தப்படி ஒவ்வொன்றாய் நிறைவேறும். நமக்கு எத்தகைய கஷ்டங்களும், சோதனைகளும் நேர்ந்தாலும் நம்மால் அதை நமது விசுவாசத்தின் மூலம் தகர்த்து வெற்றி வாழ்க்கை வாழ முடியும். அது மட்டுமல்ல, விசுவாசத்தினால் தேவ சித்தத்தை அறிந்து, அவர் நம்மிடம் எதிர்பார்க்கும் குணங்களை தேடவும், சத்தியத்தை நடைமுறைப்படுத்தவும், அவருடைய ஆளுகைக்கும், ஏற்பாடுகளுக்கும் கீழ்ப்படியவும் அவருக்கு சாட்சியாக நிற்கவும் முடியும்.

விசுவாசத்தை செயல் படுத்துவோம். தேவனுடைய பிரகாசிப்பித்தலுக்கும், கீழ்ப்படிதலுக்கும் நன்றி செலுத்துவோம். ஆமென்

Article by

Women's Fellowship



# தேவ மனிதரின் நாட்டம்

அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் ஸ்தோத்திரம். "நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும், தேவபக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சாந்த குணத்தையும் அடையும்படி நாடு" (1தீமோ 6:11).

ஒரு காலத்தில் ஒரு சிறிய கிராமத்தில் அரவிந்த் என்ற ஒரு இளைஞன் இருந்தான். அவனுக்கு வாழ்க்கையில் ஒரு பெரிய ஆசை. "தான் விரும்பினதை அடைய வேண்டும்" என்று.அவன் புகழ் வேண்டும் என நினைத்தான், ஆனால் யாரும் அவனை கவனிக்கவில்லை. பணம் வேண்டும் என்று நினைத்து, நன்று சம்பாதித்தான். ஆனால் மனதில் நிம்மதி இல்லை. ஒரு நாள் ஒரு முதியவரை சந்தித்தான். அவரிடம் கூறினான், "நான் வாழ்க்கையில் எல்லாம் முயற்சி செய்தேன்.புகழ் பணம் தேவையென்று ஆனாலும் மன நிறைவு இல்லை. மனநிறைவுக்கு என்ன செய்ய வேண்டும்?" ஐயா என்றான். முதியவர் சிரித்துவிட்டுச் சொன்னார்: "நீ விரும்பியது வாழ்க்கை அல்ல, ஆனால் உண்மையான மகிழ்ச்சி, வாழ்க்கையை அப்படியே ஏற்றுக் கொள்வதுதான்" என்றார். அந்த வார்த்தைகள் அரவிந்தின் மனதை மாற்றின. பிறகு அவன் விருப்பங்களை, விருப்பங்களாகவே வைத்துக்கொண்டு, நடக்கிற வாழ்க்கையை அன்போடு, அவன் சந்தோஷமாக வாழ தொடங்கினான். நாடு, நாட்டம் என்ற வார்த்தைகள், விருப்பு அல்லது விருப்பம் என்றப் பொருளைக் குறிக்கின்றது. நம்முடைய விருப்பமானது, இந்த உலகத்தின் அத்தனைக் காரியங்களையும் விட்டு விட்டு கர்த்தர் மேலேயே இருக்க வேண்டும் என்று திருமறை கூறுகிறது. "கர்த்தரையும் அவர் வல்லமையும்நாடுங்கள்" என்று சங் 105:4—ல் படிக்கிறோம்.அவர் வெறுக்கிறதை விட்டு விலகி,அவர் விரும்புகிறக் காரியத்தை நாட வேண்டும் என கர்த்தர் இன்று நம்மிடம் எதிர்பார்க்கிறார். இன்று, அப்போஸ்தலராகிய பவுல் வழியாக நாம் நாட வேண்டிய சில செயல்களை நாம் கற்றுக் கொள்வோம்:

1. **வரங்களை நாடுங்கள்—1கொரி 12:31**
2. **அன்பை நாடுங்கள்—1கொரி 14:1**
3. **தீர்க்கதரிசனஞ் சொல்ல நாடுங்கள்—1கொரி 14:39**
4. **மேலானவைகளையே நாடுங்கள்—கொலோ 3:2**
5. **நன்மை செய்ய நாடுங்கள்—1தெச 5:15**
6. **சமாதானத்தை, பரிசுத்தத்தை நாடுங்கள்—எபி 12:14**

மேலும் 1தீமோ 6:11—ல் நீதி, தேவபக்தி, விசுவாசம், அன்பு, பொறுமை மற்றும் சாந்தகுணத்தை நாடும்படி கூறுகிறார். ஒரு தேவனுடைய மனுஷன் மேற்கூறிய அத்தனையையும் நாட விரும்ப வேண்டுமென தேவன் விரும்புகிறார்.

இன்று நம்முடைய நாட்டம் எதின்மேல் காணப்படுகிறது? அழிந்து போகும் இவ்வுலகக் காரியங்களை நாம் நாடி தேடுகிறோமா? அல்லது அழிவில்லாத வாழ்விற்குரிய காரியங்களை பெற வாஞ்சிக்கிறோமா?

ஆண்டவருடைய பிள்ளைகளாகிய நாமும் கூட சில வேளைகளில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை மறந்து, உலகத்தின் பின்னாகவே ஓடிக் கொண்டிருக்கிறோம். நம்மை நாம் ஆராய்ந்து, அறிந்து பவுல் கூறிய மேலான இக் காரியங்களைப் பெற்றிட நம்மை அவரிடம் அர்ப்பணிப்போம். உலகத்தின் பிள்ளைகளாய் அல்ல, ஆவிக்குரிய பிள்ளைகளாய் வாழ்ந்து, பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரிப்போம்.

Article by

**MR. VERSLIN BENNY**

Youth Fellowship

# இயேசுவின் சீடன் அல்பேயுவின் குமாரன் யாக்கோபு



**பெயர்:** பெயர்: யாக்கோபு (JAMES)

**தந்தை :** அல்பேயு (ALPHAEUS)

**அடையாளம்:** "யாக்கோபு சிறியவன்" என அழைக்கப்படுகிறார்.

**மற்ற பெயர்:** யாக்கோபு தெய்வநேயம்

**சீடராக அழைப்பு:**

இயேசு அவரை 12 சீடர்களுள் ஒருவராக அழைத்தார்.

மத்தேயு 10:2–3; மாற்கு 3:18; லூக்கா 6:15; அப்போஸ்தலர் 1:13.

- அவர் இயேசுவின் பின்பற்றியவர் மற்றும் அவரது போதனைகளை பரப்புவதில் முக்கிய பங்கு வகித்தார்.
- இயேசுவின் கற்பனைகளை நேரில் காணும் வாய்ப்பு பெற்றவர்.
- உபவாசம் இருந்து ஜெபம் செய்வதில் வல்லவர்.

**அவரது தாய்:**

மாற்கு 15:40– "யாக்கோபு சிறியவனுடைய அன்னை மரியா..." என்று குறிப்பிடப்படுகிறார். இது, இயேசுவின் சிலுவையில் இருந்த பெண்களில் ஒருவராகக் காணப்படுகிறார்.

**மற்ற உறவுகள்:**

மத்தேயு (வரி எடுப்பவர்) மற்றும் யாக்கோபு இருவரும் "அல்பேயுவின் மகன்" என குறிப்பிடப்படுவதால், சிலர் அவர்கள் சகோதரர்கள் என்றும் கருதுகின்றனர். ஆனால் இது உறுதி செய்யப்பட்ட ஆதாரம் அல்ல.

**சிறப்பு அடையாளம் "யாக்கோபு சிறியவன்":**

'சிறியவன்' என்பது வயது அடிப்படையில், உயரம் அடிப்படையில், முக்கியத்துவ அடிப்படையில் குறிக்கப்பட்டிருக்கலாம்.

**அவர் செய்த பணிகள்:**

பைபிளில் அவர் செய்த தீர்க்கமான வேலைகள், போதனைகள் பற்றி தனியாக குறிப்பிடப்படவில்லை.

ஆனால், அவர் இயேசுவின் 12 சீடர்களுள் ஒருவராக இருந்து, துவக்கக்கால திருச்சபையில் முக்கிய பங்கு வகித்ததாக நம்பப்படுகிறது.

**இறுதி வாழ்க்கை**

பைபிளில் அவரது இறுதி பற்றி குறிப்பிடப்படவில்லை. ஆனால் சில திருச்சபை மரபு வரலாறு கூறுவதாவது; அவர் எகிப்து அல்லது பெர்ஷியா போன்ற இடங்களில் சுவிசேஷம் பரப்பியதாக கூறப்படுகிறது. சிலர் அவர் பிடியெடுத்து கொல்லப்பட்டதாக (STONED OR CRUSIFIED) நம்புகின்றனர்.

**அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது:**

| செயல்பாடு | பயன் |
| --- | --- |
| எளிமை | புகழ் இல்லாமலிருந்தாலும் கடமை செய்து வாழ்ந்தார். |
| விசுவாசம் | கிறிஸ்துவிடம் உறுதியான விசுவாசம். |
| நடத்தை | அமைதியான சேவை அறிவுறுத்தாத நடத்தை |
| பதவி | பெரிய இடத்தில் இல்லாவிட்டாலும் தன்னுடைய பங்கில் நம்பிக்கையுடன் இருந்தார். |

**தொழில் / பணியாற்றிய இடங்கள் :**

எந்த தொழிலாளராக இருந்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. சிலர் யூத பூமியில் இருந்து வந்த சிறிய குடும்பத்தினராகக் கூறுகின்றனர். அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, இயேசுவின் சீடர்களில் ஒருவர் என்பதுடன், வெளிப்படையான பணி இல்லாத ஒரு சீடராக இருந்தாலும், அவர் விசுவாசத்தின், நம்பிக்கையின், மற்றும் எளிமையின் ஒளிமுதலாக பார்க்கப்படுகிறார்.

நாமும் புகழை நாடாமல் கடவுளின் விருப்பத்தை அடைந்திருக்க வேண்டும். யாக்கோபு போல அமைதியாய், விசுவாசத்தோடும், சேவையோடும் வாழ்வோம்.

Article by

**MRS. AJINSHA**

# MAY Winners

## Word Search

- ○ Iniyan Immanuel
- ○ Sherinsha
- ○ Smyrna Syntyche

## Fill in the Blanks

- ○ Iniyal Evangelin
- ○ Sherinsha
- ○ Hazel Hartlyn
- ○ Jesil Bernice
- ○ Smyrna Syntyche

## Kids Colouring

- ○ Iniyal Evangelin
- ○ Hazel Hartlyn
- ○ Jesil Bernice
- ○ Smyrna Syntyche
- ○ Shipra Shalom

## Cross Word

- ○ Iniyan Immanuel
- ○ Sherinsha
- ○ Smyrna Syntyche

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

Email Subject: Your name / Quiz, type / Month - Year

to Church Email: csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# LIFE




**By Deborah Ann Belka**

Life is so surprising,
one day all is well . . .
the next one may bring
seas that ebb and swell.

Life can be so hard,
nothing seems easy . . .
even when it's calm
you can still feel queasy.

Life is often tricky,
each day can bring
lots of pain and grief
or new songs to sing.

Life is oh, so fragile,
one day is like a token
the next one crashes down
leaving us feeling broken.

Life is so amazing,
for those who know
God is in control . . .
of every high and low!

**John 16:33**


***"These things I have spoken unto you,***
***that in me ye might have peace.***
***In the world ye shall have tribulation:***
***but be of good cheer; I have overcome the world."***
*(KJV)*

**~ To GOD be the GLORY ~**

# The Lords Prayer

Our father who art in heaven
Hallowed be thy name
Thy Kingdom Come,
Thy will be done on earth,
as it is in heaven.
Give us this day our daily bread
And forgive our debtors,
as we forgive our debtors
And lead us not into
temptations, but deliver us
from evil for thine is the
Kingdom, and the power, and
the glory, forever Amen

By,
SAMUEL HEBRON STEPHEN




# 1CHRONICLES 16-29

# 1 நாளாகமம் 16-29

1. ஒபேத் ஏதோமின் சகோதரர் எத்தனைப் பேர்?
2. கர்த்தரின் ஜனம் என்று சொல்லப்பட்டவர்கள் யார்?
3. இராணுவத் தலைவன் யார்?
4. அம்மோன் புத்திரரோடு போரிட யாரிடம் ஒப்புவிக்கப்பட்டது?
5. கோலியாத்தின் சகோதரன் யார்?
6. தாவீது வாங்கின நிலத்தின் தொகை எவ்வளவு?
7. எதை செய்தால் பாக்கியவானாயிருப்பாய் என்று சாலமோனுக்கு சொல்லப்பட்டது?
8. எலியேசருக்கு எத்தனைக் குமாரர் இருந்தனர்?
9. லேவியரில் சம்பிரதி யார்?
10. 14 ஆவது பாடகர் வரிசை சீட்டு யாருக்கு விழுந்தது?
11. கர்த்தரின் ஆலயத்துப் பொருட்களை விசாரித்தவர்கள் யார்?
12. புத்தியுள்ள ஆலோசனைக்காரன் யார்?
13. கட்டட மாதிரி யாரால் எழுதப்பட்டது?
14. கர்த்தரின் கரத்தில் எவைகள் உண்டு?

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

### மே-2025 மாத வினாவிற்கான விடைகள்

1. 1நாளா1:50,
2. 1நாளா2:34,
3. 1நாளா3:4,
4. 1நாளா4:40,
5. 1நாளா5:18,
6. 1நாளா6:50,
7. 1நாளா7:21,
8. 1நாளா8:33,
9. 1நாளா9:22,
10. 1நாளா10:10,
11. 1நாளா11:22,
12. 1நாளா12:33,
13. 1நாளா13:9,
14. 1நாளா14:11,
15. 1நாளா15:22.

### மே-2025 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி.பிப்ளின் நெல்சன்,
திருமதி.ராதிகா செல்வக்குமார்,
திருமதி.ஜோனிஸ் ஹெர்சல்,
திருமதி.ஜெனிபர் பால்,
திருமதி.ஹேமலதா ஸ்டீபன்,
செல்வி.அஜின்ஷா,
திருமதி.ஜெயின் ராஜவேல்,
திருமதி.ரோஸ்மேரி,
திருமதி.ரேனாஜோஸ்.

Name:

Date:

# Kids Coloring



# Heroes of the BIBLE





Find and circle the words below.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| D | Y | D | E | A | S | N | O | A | H | Y | G | E | V | E |
| A | N | O | A | C | H | O | Q | N | T | P | E | L | Y | S |
| A | J | U | E | N | A | H | L | K | G | O | Y | Z | S | T |
| R | W | E | M | D | I | Z | G | O | Y | M | H | C | T | H |
| S | F | Z | Y | O | W | E | B | C | M | N | S | Z | E | E |
| Z | Y | A | V | E | S | K | L | F | I | O | G | W | P | R |
| K | D | Y | Y | H | S | E | T | N | F | P | N | I | H | I |
| O | W | H | D | C | W | H | S | U | K | K | M | W | E | O |
| J | O | S | E | P | H | O | U | X | P | J | B | R | N | Q |
| G | P | N | N | P | Q | O | P | A | G | O | O | X | N | Q |
| S | M | H | C | K | U | T | R | V | M | S | E | H | B | F |
| Y | M | A | K | T | F | A | L | D | T | H | F | C | A | T |
| F | H | P | A | U | L | A | W | G | G | U | R | L | C | Y |
| S | C | T | W | R | Z | Z | A | Z | P | A | N | F | F | F |
| A | B | R | A | H | A | M | Y | D | D | A | V | I | D | N |

- NOAH
- MOSES
- DAVID
- DANIEL
- YESHUA
- PAUL
- ESTHER
- ABRAHAM
- JOSEPH
- STEPHEN
- JOSHUA
- SOLOMON

Name : ..........................................................................

WORD SEARCH


FILL IN THE BLANKS Name : ..............................

# Books of the Bible

| Find... | Answers |
|---|---|
| 1. The longest book of the Bible | ________ |
| 2. Two books named after women | ________ |
| 3. The book after Micah | ________ |
| 4. The last book of the Old Testament | ________ |
| 5. The shortest book of the Bible | ________ |
| 6. The book before Ezra | ________ |
| 7. A book with 2nd in the title | ________ |
| 8. The last word in the Bible | ________ |
| 9. The last book of the Gospels | ________ |
| 10. The tenth book of the New Testament | ________ |
| 11. Write I John 4:19 verse | ________ |
| 12. The shortest Bible verse | ________ |
| 13. The longest chapter in the Bible | ________ |
| 14. A book that starts with the letter "E" | ________ |
| 15. A book that ends with the letter "H" | ________ |
| 16. The book that has 3 words in its title | ________ |
| 17. The 56th book of the Bible | ________ |
| 18. The 25th book of the Bible | ________ |
| 19. The book with 2 G's in its title | ________ |
| 20. The book that mentions Noah | ________ |
| 21. The 2 books that detail David's life | ________ |
| 22. The book named after a Queen | |

# CROSS WORD

**Name :** ..........................................................................




**ACROSS**

2 Food of John the Baptist

5 Therefore do not fear; you are of more value than many __

7 Daniel was thrown into a den of __

9 Beware of false prophets, who come to you in sheep's clothing, but inwardly they are ravenous __

10 As the __ pants for streams of water, so I long for you, O God.

11 First bird released by Noah

14 Before the __ crows, you will disown me three times!

15 Most frequently mentioned animal in the Bible

**DOWN**

1 Jesus' parable of the sheep and __

10 The Holy Spirit appeared at Jesus' baptism as this animal

12 Industrious insect of Proverbs

13 Jesus fed 5000 with two __ and five loaves of bread

3 It is easier for a __ to go through the eye of a needle than for a rich man to enter the kingdom of God

4 White animal in Revelation

6 Eden tempter

7 The __ of God, who takes away the sin of the world!

8 Do not give what is holy to the dogs; nor cast your pearls before __

# JUNE - 2025

| | |
|---|---|
| 03-JUNE | Mr. D. Jeyakumar |
| 04-JUNE | Ms. Nancy Esther Rajathi |
| 05-JUNE | Mrs. Shalini |
| 05-JUNE | Mrs. K.S. Monsy |
| 06-JUNE | Ms. Jaffrin Jerald |
| 06-JUNE | Mr. Joel Ranjith Kumar |
| 08-JUNE | Mr. Ujin Raj |
| 09-JUNE | Ms. Ansilin Suga |
| 09-JUNE | Mr. P. Chandrasekar |
| 10-JUNE | Mr. Nishan Josap |
| 10-JUNE | Mr. Thiyagu Murugaraj |
| 12-JUNE | Mrs. Anitha Jose |
| 17-JUNE | Mrs. Malini |
| 18-JUNE | Mrs. Kezia Jeyakodi |
| 19-JUNE | Mr. Melbin Paul |
| 22-JUNE | Mr. Belfer John Sigamony |
| 22-JUNE | Mrs. Jennifer |
| 23-JUNE | Mr. Ashok Prasad |
| 23-JUNE | Ms. Shiny Rebeca |
| 24-JUNE | Mr. Prince Pitchiah |
| 27-JUNE | Mr. M. Nesamony |

*"For through wisdom your days will be many, and years will be added to your life."*

*-proverbs 9:11*



# JUNE Wedding ANNIVERSARY

| | |
|---|---|
| **01-JUN** | Mr. Jeremiah Kingston<br>&<br>Mrs. Olivia Sherin |
| **04-JUN** | Mr. Jerin<br>&<br>Mrs. Sebatini Samuel Jerin |
| **06-JUN** | Mr. Ashok Prasad<br>&<br>Mrs. Eben A. Prasad |
| **06-JUN** | Mr. Dhana Sekar<br>&<br>Mrs. Grace Packia Sugirtha |
| **15-JUN** | Mr. S. Deva Prakash<br>&<br>Mrs. Sheeba Deva Prakash |
| **16-JUN** | Mr. K.S. Suji kumar<br>&<br>Mrs. D. Berlin Suniba |
| **21-JUN** | Mr. Balaji Ramaiyan<br>&<br>Mrs. Roselin Tamil Selvi |
| **29-JUN** | Mr. Celin Jose<br>&<br>Mrs. Anitha Jose |

*"Two are better than one, because they have a good return for their labor: If either of them falls down, one can help the other up."*

-Ecclesiastes 4:9-10







நேசிக்க ஏவுமே.
naesikka aevumae.





EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY

# GOD IS IN CONTROL

*Seek Him first*

Matthew 6:33-34

SEEK FIRST THE KINGDOM OF GOD
AND HIS RIGHTEOUSNESS, AND ALL THESE
THINGS SHALL BE ADDED TO YOU.

THEREFORE DO NOT WORRY ABOUT TOMORROW.
FOR TOMORROW WILL WORRY ABOUT
IT'S OWN THINGS. SUFFICIENT FOR THE DAY
IS IT'S OWN TROUBLE.